சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். CP 4606/E/2024**

திரு.V.லோகநாதன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தென்சென்னை கோட்டம், சென்னை மாவட்டம்- 600 032. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.V.லோகநாதன் அவர்கள் சார்பு அவரது மகன் திரு.L.தட்சணாமூர்த்தி இன்றைய விசாரணையில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திரு.பாலாஜி பாரதி, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், தென்சென்னை கோட்டம், சென்னை அவர்கள் ஆஜரானார். |

| | |
|---|---|
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 02.09.2024 |
| **<u>கோரிய தகவல்</u>**, தனது 29.07.2024 மனு மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தகவலாக வழங்கவும், நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் அதற்கான காரணத்தை தகவலாக வழங்கவும் என 3 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, வருவாய் கோட்டாட்சியர், சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | ந.க.எண்.அ2/002/2025, நாள் 01.12.2025 |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | --- |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | ---- |
| சட்டப்பிரிவு 18(1)-ன்கீழ் புகார் மனு நாள் | 30.09.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தங்கள் அலுவலக கடித ந.க.எண்.அ2/003930/2024, நாள் 03.07.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.
- மனுதாரர் பிரதிநிதி, தனக்கு உரிய தகவல் நாளதுவரை வழங்கப்படவில்லை என எடுத்துரைக்கிறார்.

2. மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் 02.09.2024 தேதியிட்டு சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரிய தகவல்களுக்கு, பொதுத் தகவல் அலுவலரின் ந.க.எண்.அ2/002/2025, நாள் 01.12.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், மடிப்பாக்கம்-2, S-கொளத்தூர் கிராமம் சர்வே எண்.389/4, 390/1 ஆகிய நிலத்தை கூட்டுப் பட்டாவாக உள்ளதை தனிப்பட்டாவாக தரக்கோரி மனு செய்தது தொடர்பாக சோழிங்கநல்லூர் வட்டாட்சியரிடம் விரிவான அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும், அறிக்கையினை அடிப்படையிலும், மனுதாரர் சமர்ப்பிக்கும் ஆவணங்கள் மற்றும் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணை அடிப்படையிலும் மனுதாரர் மனு மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

b) அதன்பின், பொதுத் தகவல் அலுவலரின் 03.07.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக, சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், மடிப்பாக்கம்-2, S-கொளத்தூர் கிராமம் சர்வே எண்.389/4, 390/1 ஆகியவை பல்வேறு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என அ-பதிவேட்டின்படி தெரியவருவதால், மேற்படி புல எண்களில் மனுதாரர் அனுபவத்தில் தற்போது எவ்வித நிலமும் இல்லை என்று சார் ஆய்வாளர், சோழிங்கநல்லூர் வட்டம் புலத்தணிக்கையில் தெரியவருவதால் மனுதாரரது கோரிக்கையினை ஏற்க இயலவில்லை என மனுதாரருக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

c) இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனு குறித்த விபரம் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரார் கோரிய தகவல்களுக்கு இனம் வாரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது இன்றைய ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது.

d) எனவே, பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன் இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள 3 இனங்களுக்கான தகவல்களை, இனம் வாரியாக பட்டியலிட்டு, மேற்படி தகவல்களை சட்டப் பிரிவு 7(6)-ன்படி கட்டணம் ஏதுமின்றி, <u>அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன்,</u> ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

e) மேலும், மனுதாரரின் 02.09.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை பெற்றுக்கொண்டு<u>, வரையறுக்கப்பட்ட 30 தினங்களுக்குள் மனுதாரருக்கு தகவல் வழங்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து, அவர் மீது சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினை தனியரிடமிருந்து பெற்று</u>, அதுகுறித்து தனது எழுத்து மூலமான அறிக்கையினை இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வருவாய் கோட்டாட்சியர், தென்சென்னை அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

f) மேற்படி உத்தரவினை முழுமையான நிறைவேற்றி அதுகுறித்த அறிக்கையினை மேற்சொன்ன தேதியில் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க

தவறும் பட்சத்தில், விளக்கம் அளிக்க ஏதும் இல்லை என ஆணையத்தால் கருதப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4606/E/2024</u>**
**<u>பெறுநர்</u>**

முதல் மேல்முறையீட்டு அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தென்சென்னை கோட்டம்,
சென்னை மாவட்டம்- 600 032.

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தென்சென்னை கோட்டம்,
சென்னை மாவட்டம்- 600 032.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**
திரு.V.லோகநாதன், த/பெ.வெள்ளை நாயுடு,
எண்.5/73, பிள்ளையார் கோவில் தெரு?
S.கொளத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை - 600 129.

Copy to: File MP/PA-